# சத்தியம் உங்களை இவற்றிலிருந்து விடுதலையாக்கும்



ப்ரின்ட்லேன்ட் பப்லிஷர்ஸ்

லைனஸ் மற்றும் சூசன் டேனியேல்


To Subscribe to this magazine Free of Cost:

**In Sri Lanka**
*Write to:*
The Christadelphians,
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA.

**In India**
*Write to:*
The Christadelphians,
P.O. Box 4237
Bangalore 560-042
India


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 43


- கர்த்தருக்கென பக்தி வைராக்கியம்
- தேவனுடைய நகரம்
- வேதத்தில் - சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள்
- வினாவிடை
- வாசித்துச் சிந்திக்கவும்.



# Issue 43

- கர்த்தருக்கென பக்தி வைராக்கியம்
- தேவனுடைய நகரம்
- வேதத்தில் - சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள்
- வினாவிடை
- வாசித்துச் சிந்திக்கவும்.

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
**e-mail: linus.daniel@hotmail.com**
http://tamil.icdelph.org/
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
The Christadelphians,
P.O. Box 4237, Bangalore 560-042
India
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
The Christadelphians,
P.O. Box 60, Negombo - 11500,
SRI LANKA.
Email: slcbm2@sltnet.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" **(2. கொரிந்தியர் 5:17).***



# கர்த்தருக்கென பக்தி வைராக்கியம்

நம் பரமபிதா அரைகுறை இருதயத்தை வெறுக்கிறார். இஸ்ரவேலுக்கு அவர்கள் சிறையிலிருந்தபொழுது அவர் கொடுத்த அறிவுரைகளில் இதைக் காண்கிறோம். "அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுது கொண்டு என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள். நான் உங்களுக்குச் செவி கொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்." (எரேமியா 29:12,13). அவர்கள் அவரை உண்மையான வாஞ்சையோடும், தொடர்ச்சியான முயற்சியோடும் தேடவேண்டும். உற்சாகமற்ற நிலையில் வருவதில் பயனில்லை.




இதற்காகவே இயேசு லவோதிக்கேயா விசுவாசிகளைக் கடிந்து கொண்டார். "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும் இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன்.... நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு" (வெளி 3:15, 16,19) ஜாக்கிரதை, அல்லது வைராக்கியத்தைத் தான் கர்த்தர் தம்மைப் பின்பற்றுவோரிடமிருந்து எதிர்பார்க்கிறார்.

### பினெகாசின் முன்மாதிரி

ஆரோனின் பேரனான பினெகாஸுக்கு மெய்யாகவே வைராக்கியம் என்ற குணம் இருந்தது. இஸ்ரவேலரில் ஒருவன் துணிகரமாக ஒரு மீதியானியப்

பெண்ணை ஒரு கூடாரத்திற்குள் ஒழுக்கக்கேடான செயலுக்காக அழைத்துக்கொண்டு வந்தபோது, எல்லோருமே பீதியடைந்தார்கள். அவர்கள் எந்த முடிவும் எடுக்கமுடியாமல் கையைப் பிசைந்து கொண்டு அழுதவாறே ஒன்றும் செய்யாமல் ஆசரிப்புக் கூடார வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். இது ஒரு சரியான பிரச்சனைதான். மனிதன் பயங்கரமான பாவத்தைச் செய்து கொண்டிருந்தாலும் அவன் ஒரு முக்கியமான நபராயிருந்தான் - சிமியோனியப் பிரபுக்களில் முக்கியமான தலைவர்களில் ஒருவனாகிய சல்லுவின் குமாரன்.

ஆனால் பினெகாஸ் மனிதர் முகம் பார்த்துச் செயல்படுவனல்ல. அவனுக்கு அப்படிபட்ட தடைகள் எதுவும் கிடையாது. இத்தகைய பயங்கரமான நடத்தை தண்டிக்கப்படாமல் விட்டுவிடப்படுமானால், முழு சபையும் தேவனின் தண்டனையை அனுபவிக்க வேண்டிய ஆபத்திலிருப்பதை உணர்ந்தவனாய் வேகமாகத் தன் ஈட்டியால் ஒரே குத்து குத்தி பிரச்சினையைத் தீர்த்து வைத்தான். இப்படி தேவ கோபாக்கினையை விலக்கினான். "கர்த்தர் மோசேயை நோக்கி : நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான். ஆகையால் இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன். அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்." (எண். 25:10-13).

இந்த நித்திய வெகுமதி (ஆசாரியபட்டம்) தகுதியானதே. பினெகாஸ் பக்திவைராக்கியத்தோடு செயல்பட்டான். சபையிலுள்ள மற்றவர்களோ வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**சவுலின் முன்மாதிரி**

ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்குப்பின் தர்சு பட்டணத்து சவுல், ஸ்தேவான் கல்லெறியப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் காலத்து இஸ்ரவேலர் தேவனைப் பற்றி வைராக்கியம் கொண்டிருந்தார்கள். ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல" (ரோமர் 10:2). இந்த அறியாமையும், மத வெறியும், பொறாமையும், சேர்ந்து தேவ குமாரனின் மரணத்திற்குக் காரணமானது. இளம் வைராக்கியமான பரிசேயனாகத் தான் வாழ்ந்த நாட்களை நினைவு கூர்கையில், "நான் யூத மார்க்கத்திலிருந்தபோது என்னுடைய நடக்கையைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி, என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும்



யூத மார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்...." பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன். மூர்க்கமடைந்த யூதருக்கு முன், தனக்காக வாதாடும்போதும் பவுல் அதையே தான் கூறுகிறார் : "நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன். அதற்குப் பிரதான ஆசாரியரும் மூப்பர் யாவரும் சாட்சி கொடுப்பார்கள். அவர்கள் கையிலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக் கொண்டு, தமஸ்குவிலிருக்கிறவர்களும் தண்டிக்கப்படும்படிக்கு, அவர்களைக்கட்டி, எருசலேமுக்குக் கொண்டுவரும்படி அவ்விடத்திற்குப் போனேன்" தவறாக வழிகாட்டப்பட்ட வைராக்கியத்தின் அபாயத்தை அதன்பின் விளங்கினவராக துக்கத்தோடும் வருத்தத்தோடும் பேசினார். தவறாகப் போதிக்கப்பட்டாலும் அவருடைய தேவனுக்காகத்தான் அவர் வைராக்கியம் கொண்டிருந்தார். எல்லா இருதயங்களையும் அறிந்த தேவன், இதையும் கண்டார். இத்தகைய மனிதனைக் கொண்டு தேவன் ஒன்றைச் செய்ய முடியும்.

அனனியா பிரமிக்கத்தக்கதாக சவுல் கிறிஸ்துவின் ஸ்தானாபதியாகத் தெரிந்து கொள்ளப்பட்டார். "அதற்கு அனனியா : ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன்." அதற்குக் கர்த்தர் : நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்." (அப். 9:13,15). என்றார்.

நாம் இங்கு சற்றே நின்று இந்தப் பாடத்தை நம் வாழ்க்கையில் பயிற்சி செய்ய சிந்திக்க வேண்டும். பக்திவிருத்திக்கேதுவான காரியங்கள் கூறப்படும்போது, அவைகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்களாய் நாம் தலையை ஆட்டினாலும், அடி மனதில், அந்நல்லறிவுரைகளை விட்டு நம்மைத் தொலைவில் வைத்துக் கொள்கிறோம். நம் சகோதர சகோதரிகளுக்கு நாம் எப்படி ஊழியம் செய்கிறோம்? நிதியுதவியோ உடல் உழைப்போ நாம் ஆர்வமும் துடிப்பும் காட்டுகிறோமா? நாம் காட்ட வேண்டும்; ஏனெனில் பவுல் கொரிந்தியருக்கு எழுதுவதுபோல பக்தி வைராக்கியம் தொற்றிக் கொள்ளக் கூடியது. "பரிசுத்தவான்களுக்குச் செய்ய வேண்டிய தர்மசகாயத்தைக் குறித்து, நான் அதிகமாக உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. உங்கள் மனவிருப்பத்தை அறிந்திருக்கிறேன். அகாயாவிலுள்ளவர்கள் ஒரு வருஷமாக ஆயத்தமாயிருக்கிறார்களென்று, நான் மக்கதோனியருடனே சொல்லி, உங்களைப்

புகழ்ந்தேனே; உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பி விட்டதுமுண்டு" (2கொரி 9:1,2). ஆகவே பக்தி வைராக்கியம் தொற்றிக்கொள்ளக் கூடியது.

**ஊக்கமாக ஜெபித்தல்**

நாம் நன்கு அறிந்தவர்களுக்காக மட்டுமல்ல, அகில உலக சகோதரர்களுக்காகவும் நாம் உற்சாகமாக ஜெபிக்கிறோமா? நம் அருட்பணியாளர்களும் விசுவாசிகளும் மூன்றாம் நிலை நாடுகளில் சத்தியத்தை நிலைநாட்டப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நம் பரமபிதாவிடம் அவர்கள் நல்வாழ்விற்காக விண்ணப்பம் பண்ண நம் தேவைப்படுகிறோம். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக்கோபு 5:16).

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு உத்தமமான சீஷன் அப்படிச் செய்துகொண்டிருந்தான். "எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான். உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளில்லாற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும், நிலை நிற்க வேண்டுமென்று தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும் ஏராப்போலியருக்காகவும் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறானென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்" (கொலோ 4:12,13) அவர்கள் மத்தியில் அவன் இல்லாவிட்டாலும் கூட, எப்பாப்பிரா கொலோசேயிலுள்ள தன்னைப் போன்று விலையேறப் பெற்ற விசுவாசமுள்ள மக்களுக்காக தன் முழு பலத்தோடும் ஜெபம் பண்ணினான். சுந்தர்ப்ப சூழ்நிலை எப்படி இருந்தாலும், மூப்படைந்திருந்தாலும் பெலவீனமாயிருந்தாலும் நாமெல்லாருமே இப்படி ஜெபிக்கலாம்.

**நம் மகத்தான முன்மாதிரி**

எப்போதும் போலவே, நம் ஒரே முன்மாதிரி கிறிஸ்துவே. தேவனுடைய காரியங்களுக்காக ஒரே மனதுடன் தீர்மானமும் பக்தி வைராக்கியமும் கொண்டதினால் வெளிப்பட்ட அதிகமான சக்தி கொண்டு தேவாலய சுத்திகரிப்பு நிறைவேற்றப்பட்டது. தீர்க்கதரிசன நிறைவேறுதலைப் புரிந்து கொள்வதில் மந்தமாயிருக்கும் சீஷர்களில் இச்சம்பவம் ஆழமானதொரு பாதிப்பை ஏற்படுத்தியது. "உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவு கூர்ந்தார்கள்." (யோவான் 3:17) முரணுரை யாதெனில் பிதாவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கொண்டிருந்த தொடர்ச்சியான பக்தி வைராக்கியம் ரோம சேனைகளால் கி.பி. 70ல் தேவாலயம் மக்களின் பாவத்திற்குத் தண்டனையாக அழிக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று.



"நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள்" (தானியேல் 9:26).

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறதென்றும் அறியாதிருக்கிறீர்களா?.....தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்" (1கொரி 3:16,17) தன் சீஷனான தீத்துவுக்குப் பவுல் கொடுத்த அறிவுரைகளை நம் இதயத்தில் ஏற்றுக்கொள்வது நலம். "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது." பின்னர் இயேசுவின் மீட்கும் கிரியையின் சாராம்சத்தை அப்போஸ்தலர் இப்படி வடிக்கிறார். "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். (தீத்து 2:14)"

இது நம்பமுடியாதது. ஆனால் உண்மை. தேவகுமாரன் நம் பாவங்களை நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்படியாகவும் அவருடைய சொந்த ஜனங்களாக ஏற்றுக்கொள்ளவும் மனப்பூர்வமாய் சிலுவையில் மரித்தார்.

இதை மனதில் கொண்டால், நாம் எப்படி அவருக்கென்று உழைப்பதில் பக்திவைராக்கியம் இல்லாமலிருக்க முடியும்?

அப்போஸ்தலர்களோடு நாமும் சேர்ந்து இராஜ்யம், அதன் ராஜா மற்றும் நீதியுள்ள அரசாட்சி ஆகியவைகளுக்காக உற்சாகமும், சந்தோஷமும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியானாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்". (ஏசாயா 9:6,7).

சேனைகளின் கர்த்தருக்காக, பக்தி வைராக்கியத்தினால் நிரம்பியிருந்த அவருடைய குமாரன் தன் ஜீவனையே கொடுக்க முடிந்தது. அவருடைய பக்தி வைராக்கியம் அப்போஸ்தலர்களை நிரப்பியது. அவர்களுடைய பக்தி வைராக்கியம் விசுவாசிகளையும் நம்மையும் நிரப்ப வேண்டும். நாம் நம்முடைய பக்திவைராக்கியத்தினால் ஆண்டவருடைய காரியங்களுக்காக மற்றவர்களைத் தூண்ட வேண்டும்.

# தேவனுடைய நகரம்

நம் விசுவாசத்தின் மூலைக்கல்லாக இருப்பவை ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குத்தத்தங்கள். ஆகவே அவை ஒவ்வொரு விசுவாசிக்கும் இருதயத்துக்கும் மிகவும் பிரியமானவை. விசுவாசத்தினால் நாம் பெறும் இரட்சிப்பின் கோட்பாடு இயேசுவை ஆபிரகாமின் சந்ததி இரட்சகர் என்றும் அவர் மூலமாய் வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்கள் உறுதி பண்ணப்பட்டிருக்கின்றன என்றும் விளக்கம் தருகிறது. "உன் சந்ததிக்கும் (கிறிஸ்து) பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 22:18, அப். 3:25) அவபக்தியுள்ளோர் மத்தியில் அந்நியர்களாக நாம் வாழும் வாழ்க்கை வாக்குத்தத்தங்களை நமக்கு ஜீவனுள்ளவைகளாக மாற்றியுள்ளது.

பொல்லாதவர்களின் தீய செயல்கள் தொடர்ந்து அதிகமாகும் போது, வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவும், சமாதானமும், நீதியும் நிலவும் உலக அமைப்பை நிறுவவும் கிறிஸ்து வரவேண்டியதன் அவசியத்தை நாம் அதிகமதிகமாக உணர்கிறோம். தேவனுக்குத் தன் முதுகைக் காட்டியிருக்கிற உலகை நாம் காண்கிறோம். நாம் இப்போது வாழும் இந்தக் காலம், "இதற்கு முன் ஒரு போதும் இருந்திராத உபத்திரவ காலம்." எப்போதும் போலவே, நாம் வேத வாக்கியங்களிடம் திரும்பினால், தொடரும் மகிமையைக் குறித்த தரிசனமும், நம்பிக்கையின் செய்தியும், தங்கள் நம்பிக்கையைக் கர்த்தர் பேரில் வைப்பவர்களுக்கு உண்டு எனக் காண்கிறோம்.

### நித்திய நகரம்

ஆபிரகாமுக்கு அளித்த ஆசீர்வாதம் நிறைவேறுதல் குறித்து ஒரு முக்கியமான உருவகம் எபிரேயருக்கெழுதிய நிருபத்தில் உள்ளது. "ஏனெனில் தேவன் தாமே கட்டி உண்டாக்கின நகரத்துக்கு அவன் (ஆபிரகாம்) காத்திருந்தான்." (எபி 11:10). இது கல்லினாலும் சாந்தினாலும் கட்டப்பட்ட நகரமல்ல. அழிவில்லாதவர்களாக ஆக்கப்பட்ட பரிசுத்தவான்களாலான ஒரு மாபெரும் எதிர்கால நகரம். ஆபிரகாம் நாட்டியதும், நாம் நாட விரும்புவதுமான நகர் அது. தனக்கு நித்திய வாழ்வு எதிர்காலத்தில் உள்ளது என்பதை



உணர்ந்தவராய், வாக்குத்தத்த பூமியில் அந்நியனாயிருப்பதாக நம் முற்பிதா உணர்ந்தார். அவருடைய உண்மையாய்க் காத்திருக்கும் பண்பைப் பகிர்ந்து கொண்டவர்களாக, ஆபிரகாமின் சந்ததியாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் ஆபிரகாமுக்கு உறவினராகும் எல்லா மக்களுக்கும் தேவன் ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கும் நகரத்தில் பிரவேசிக்க நாம் வாஞ்சிக்கிறோம். இச்சை மற்றும் கொடுங்குற்றங்களால் பைத்தியமாகிப்போன உலகில், நாம் பாடுகளையும் சோதனைகளையும் சகிக்கும்போது, தேவனுடைய நகரமெனும் நம் நம்பிக்கையின் தரிசனத்தால் ஆறுதலடைகிறோம், பெலப்படுத்தப்படுகிறோம். "அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்கள் தேவன் என்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே." (எபி. 11:16).

### தேவனுடைய நகரத்தினுள் செல்லுதல்

தேவனுடைய நகரம் என்பது அழிவில்லாமை எனும் ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிப்பதைக் குறிக்கிறது. இந்த நிலைமைக்குள் செல்வதற்கான ஒரே வழி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாகத்தான். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:16) பிதாவினிடத்தில் வருவதென்பதில் அர்த்தங்கள் பல உண்டு. முடிவாக, அழிவில்லாமையில் நாம் பிதாவோடே சேர்ந்து கொள்வோம். மொத்தத்தில் அழிவில்லாமையைத் தரித்துக்கொண்ட பரிசுத்தவான்கள், தேவனுடைய வல்லமை முழுமையாகத் தங்கும் மக்கள் நிரம்பிய நகரத்திற்கு ஒப்புவமையாக்கப்பட்டுள்ளார்கள்.

### தேவனுடைய வீடு

இவ்வுலகில் நகரத்தின் பெரும்பாலான கட்டிடங்கள் குடிமக்கள் வாழும் வீடுகளும் அவர்கள் ஆராதிக்கக் கூடும் ஆலயங்களுமாகும். அதே போல ஆவிக்குரிய உலகில் கட்டிடங்கள் என்பது தேவன் வாசம்பண்ணும் மக்கள்தாம். "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்". (யோவான் 14:2,3) ''நான் அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே." (2கொரி 6:16) இந்த வசனம் நமக்கு நன்றாகத் தெரிந்ததுதான் என்பதே அதன் முழு அர்த்தத்தை நாம் பெற்றுக்கொள்ளத் தடை செய்யக்கூடும். ஆகவே அது நம்மில் கொண்டுவரக் கூடிய மாற்றத்தை இழந்துவிடுவோம். தேவனைப் பற்றிய அறிவு



எல்லோருக்கும் இருக்கும்போது, ஏதேனிலிருந்த நிலைமை மீண்டும் வரும். அப்போது, உன்னதமான தேவன், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் மனித குலத்தின் மத்தியில் வாசம் பண்ணி, மறுபடியும் உலாவுவார்.

**மூலைக்கல்**

எந்த ஒரு பெரிய கட்டிடத்தையும் எழுப்புமுன் அஸ்திபாரம் இடும் வேலை நடைபெறுகிறது. தேவனுடைய கட்டிடத்திலும் அதே தான் நடக்கிறது. பவுல் எச்சரிக்கிறபடி, போடப்பட்டுள்ள அஸ்திபாரத்தின் மேல் எப்படிக் கட்டுகிறோம் என்பதைக் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்". நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்... நீங்கள் தேவனுடைய மாளிகையாயிருக்கிறீர்கள். எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மூலம் கட்டுகிறான். (1கொரி 3:9:10) பவுல் மூலைக்கல்லைக் கிறிஸ்துவின் ஒரு மாதிரி எனப் பயன்படுத்துகிறார். ''அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது." (எபே 2:20,21)

அப்போஸ்தலனாகிய பேதுருவும் இதே எடுத்துக்காட்டைத் தருவதோடு உண்மையும் உத்தமுமுள்ள மக்களை ஜீவனுள்ள கற்கள் என விவரிக்கிறார். "ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப்



பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள். அந்தப்படியே, இதோ தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுகிறதில்லை". (1பேதுரு 2:5,6) கிறிஸ்துவே பூரணவடிவுள்ள மூலைக்கல்; தேவனுடைய மாளிகை, அவரை வைத்தே துல்லியமாகத் தூக்குநூல் வைத்துக் கட்டி எழுப்பப்படும்.

**பரலோகத்திலே நம்வீடு**

சற்று வித்தியாசமாக, நம் எதிர்கால அழியாமையை பரம வாசஸ்தலம் எனப் பவுல் காட்டுகிறார் : "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துத் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்." (2கொரி 5:1,2) இங்கே வரப்போகும் அழிவில்லாமையாகிய மகிமைக்காக நாம் ஏங்கித் தவிப்பதை அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். மேலும் ஒரு தரிசனத்தை விவரிக்கையில் பவுல், "பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப் படாததும் வாக்குக் கெட்டதுமாகிய வார்த்தைகளைக் கேட்டான்". என்று கூறுகிறார். (2கொரி 12:3).

நியாயத்தீர்ப்புக்குப்பின் அழிவுள்ளதிலிருந்து அழிவில்லாமைக்குள் நாம் எடுத்துக் கொள்ளப்படும் (எழுப்பப்படும்) அந்த நாளுக்காக நாம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதன்பின் நம் ஆண்டவரோடு பூமியில் அவருடைய ராஜ்யத்தில் அவரோடு வாசம் பண்ணுவோம்.

**பரிசுத்த நகரமாகிய புது எருசலேம்**

யோவான், பத்மு தீவிலிருக்கும்போது, இன்னொரு புத்துயிர் தரும் ஒரு தரிசனத்தைப் பெற்றார். "யோவானாகிய நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன். அது இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்." (வெளி. 2:2,3).

எபிரேயருக்கு நிருபத்தை எழுதினவரும் மகத்தான இந்த நகரத்தைக் கண்டவராக "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும்.... வந்து சேர்ந்தீர்கள்" என எழுதுகிறார்.

(எபி. 12:22).

இந்த மகிமையான தரிசனங்களை நாம் தியானிக்கும் போது, சங்கீதக்காரனின் வார்த்தைகளையே எதிரொலிக்கிறோம். "என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். (சங். 23:6) பிதாவின் வீட்டின் பொறுப்பு தேவனுடைய குமாரனான, இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த மொத்தக் கட்டிடத்தின் ஒரு பகுதியாக நாம் இருப்போம் என்பது நமது நம்பிக்கை. "கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார். நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்". (எபிரேயர் 3:6).

# வேதத்தில் - சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள்

யோவேல் 2:10ல் கர்த்தருடைய நாளை விவரித்துக் கூறுகையில், "பூமி அதிரும்; வானங்கள் அசையும்; சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும்; நட்சத்திரங்கள் ஒளிமங்கும்," என்று சொல்லப்பட்டுள்ளது. வேதத்தில் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் எதைக் குறிக்கின்றன என்றும், யோவேல் புத்தகத்தில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்றும் பார்ப்பதே இப்பாடத்தின் நோக்கம்.

வேதத்தில் முதன் முதலாக சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் பற்றிப் பேசப்படுவது ஆதியாகமம் 37:9ல் அதில் நாம் யோசேப்பின் இரண்டாவது சொப்பனத்தைப் பற்றி வாசிக்கிறோம். "அவன் வேறொரு சொப்பனம் கண்டு, தன் சகோதரரை நோக்கி, நான் இன்னும் ஒரு சொப்பனம் கண்டேன்; சூரியனும் சந்திரனும், பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான்" அப்பொழுது யாக்கோபின் பதில் என்னவாயிருந்தது என வாசிக்கிறோம். "அவன் தகப்பன் அவனைப் பார்த்து, நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ? என்று அவனைக் கடிந்து கொண்டான்."

சொப்பனத்தின் அர்த்தம் தெளிவாயுள்ளது. இஸ்ரவேலின் குடும்பத்தின்



அங்கத்தினர்களை சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் குறிக்கின்றன. சூரியன் தன்னைக் குறிப்பது என்றும், சந்திரன், யோசேப்பின் மரித்துப் போன தாயைக் குறிப்பது என்றும், நட்சத்திரங்கள் அவன் சகோதரனாக் குறிப்பவை என்றும் இஸ்ரவேல் புரிந்துகொண்டான். கிறிஸ்துவுக்கு முன் அடையாளமான யோசேப்பை இவர்கள் பணிந்து வணங்கி மரியாதை செய்வதாகக் காட்டப்பட்டது.

பகலை ஆள்வதற்காக சூரியன் படைக்கப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. (ஆதி 1:16 சங் 136:8). 2 சாமுவேல் 23:3,4ல் தாவீது ஆவியானவரால் ஏவப்பட்டவனாய், "இஸ்ரவேலின் தேவனும், இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது: நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார். அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, மழைக்குப் பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல இருப்பார்" என்றார். (இதற்கு எதிர்மாறு யோவேல் 2:2)

முடிவாக, நீதியுள்ளவராகிய கர்த்தரே எல்லாருக்கும் மேலான அதிபதி (ஆள்பவர்) சங்கீதம் 84:11 இதையே கூறுகிறது; "தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்." கர்த்தரின் பரிபூரண வெளிப்பாடாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நீதிபரராய் ஆயிர வருட அரசாட்சியில் பூமியை நீதியாய் ஆளுவார். வெளிப்படுத்தல் புத்தகம் 1:16ல் அவருடைய 'முகம்' வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியன் போலிருந்தது எனவும் மல்கியா 4:2ல் கர்த்தரின் நாமத்துக்கு பயப்படுகிறவர்களுக்கு ஆரோக்கியக் கதிர்கள் வீசும் நீதியின் சூரியன் எனவும் வர்ணிக்கப்படுகிறார். ஆகவே தகப்பனாகவும் கணவனாகவும் இருந்த யாக்கோபு சூரியனாக ஆளுகை செய்வதற்கு அடையாளமாக நின்றான். "தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்" (1 தீமோ 3:4)

அந்தச் சொப்பனத்தில் யாக்கோபின் மனைவி - யோசேப்பின் தாயை 'இரவில் ஆள்வதற்கென' படைக்கப்பட்ட சந்திரனுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டது. இயற்கை நியதிப்படி சூரியனின் ஒளியை, மகிமையை சந்திரன் எதிரொளிக்கிறது. ஆவிக்குரிய நிலையிலும் இப்படித்தான் இருக்கிறது. நீதியின் சூரியனின் எதிர்கால மணவாட்டியாகிய கிறிஸ்துவின் சபை தேவனுடைய குமாரனில் வெளிப்படுத்தப்பட்ட தேவனின் மகிமையை எதிரொளிக்க வேண்டும். அவர்கள் நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டும். காலையில் சூரியனானவர் தோன்றும்வரை, இரவலாகப் பெற்ற ஒளியைப் பிரகாசிக்க இடமளிப்பதோடு, இரவிலே சூரியனின் மகிமையை எதிரொளிக்க வேண்டும். அப்பொழுது தான் உண்மையும் உத்தமமுமானவர்கள் ஆரோக்கியமடைந்து அவருடைய தெய்வீக

சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாவார்கள் (2 பேதுரு 1:4). அழியாமை கொடுக்கப்பட்ட மணவாட்டி "சந்திரனைப் போல் அழகும், சூரினைப்போல் பிரகாசமும், கொடிகள் பறக்கும் படையைப் போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம் போல் உதிக்கிறாள்." (உன்னதப் 6:10). மேலும் "கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக் கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப் போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப் போலும் இருக்கும்." (ஏசாயா 30:26).

"அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள்.'' (மத் 13:43). நீதிமான்கள் எனப் பன்மை பயன்படுத்தப்பட்டிருப்பதையும், ஆனால் சூரியன் ஒன்று தான் என்பதையும் கவனியுங்கள். ''விடி வெள்ளி'' கொடுக்கப்பட்டவர்கள், யாக்கோபின் நட்சத்திரத்தோடு இணைக்கப் பட்டவர்களாய், காத்தர் தம் மக்களுக்காகப் பழி வாங்கும் பொழுது பயங்கரமான சேனையாய் முன் செல்வார்கள்.

இயற்கையின் நியதிப்படி சூரியன் ஒரு நட்சத்திரம்தான். இயேசு கிறிஸ்துவிற்கு அடையாளமாயிருக்கும் யோசேப்பு தன் சகோதரரை நட்சத்திரங்களாகப் பார்க்கிறான். தானியேல் 12ல் கிறிஸ்துவுக்குள் சகோதரராயிருப்பவர்கள் ''அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்களாக நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். இப்படி ஆவிக்குரிய நியதியின்படி, இயேசு கிறிஸ்துவைக்குறிக்கும் சூரியன் ஒரு நட்சத்திரமாயில்லாமல் ஒற்றுமையாக என்றென்றுமாய்ப் பிரகாசிக்கும் நட்சத்திரங்களின் திரட்சியாகும்."

## நாட்டின் அடையாளங்கள்

ஆதியாகமம் 37ல் கூறப்பட்டுள்ள இந்த அடையாளங்கள் யாக்கோபின் குடும்பத்தினருக்கு அடையாளமாகின்றன. அவனுடைய குடும்பம் ஒரு தேசமக்களாக வளர்ந்த பின்னும் 'சூரியன்' 'சந்திரன்,' 'நட்சத்திரங்கள்' தொடர்ந்து இருந்தன. கர்த்தர் ஆபிரகாமுக்கு ''அவன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலப் பெருகப்பண்ணுவதாய்" வாக்குப் பண்ணியிருந்தார். (ஆதி 22:17, 26:4) இப்படி ஒவ்வொரு இஸ்ரவேலனும், மோசே கூறியபடி ஒரு நட்சத்திரமானான். (உபா 10:22; 26:4). ஆனால் விசுவாசமார்க்கத்தார் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாய் ராஜ்யத்தில் என்றென்றுமாய்ப் பிரகாசிப்பார்கள். சத்தியத்தைப் புறம்பே தள்ளிவிட்ட இஸ்ரவேலரோ "மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளேவைக்கப் பட்டிருக்கிறது." (யூதா 13).



எரேமியா இஸ்ரவேலைக் குறித்து இவ்விதமாகக் கூறுகிறார். ''ஏழு பிள்ளைகளைப் பெற்றவள் களைத்துப் போகிறாள்; அவள் தன் பிராணனை விட்டுவிட்டாள்; இன்னும் பகலாயிருக்கையில் அவளுடைய சூரியன் அஸ்தமித்தது." (எரேமியா 15:9). இஸ்ரவேலின் வானங்களில், "சூரியனும் சந்திரனும் இருண்டு போகும்; நட்சத்திரங்கள் ஒளி மழுங்கும்," என யோவேல் 2:10ல் கூறப்பட்டுள்ளது. இப்படி கர்த்தரின் உக்கிரகோபத்தினால் ஆளுகையும் பக்திக்கடுத்த காரியங்களும் இருளடையும்.

பாபிலோன் அழிக்கப்பட்டது; ஏனெனில் அதின் ராஜா தன் இருதயத்தில், "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்.... நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்'' (ஏசாயா 14:13,14) என்று சொன்னான். ஆனாலும் கோரேசைக் குறித்துக் கர்த்தர், "அவன் என் மேய்ப்பன்; எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான். அவன் எருசலேமை நோக்கி; நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி; நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லுவான்." (ஏசாயா 44:28;2 நாளா 36:23). ஆகவே அவனுடைய ஆளுகை செழித்தோங்க அனுமதிக்கப்பட்டது. அவனும் இஸ்ரவேலின் வானங்களில் சந்திரனும் நட்சத்திரங்களும் ஒளிர அனுமதித்தான்.

ஆனால் நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் "சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்; வானத்தின் நட்சத்திரங்கள் விழும்; வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும்" காலங்களைக் குறித்துப் பேசினார். (மாற்கு 13:24-25). இப்படி இஸ்ரவேலின் வானங்களில் சூரியன் மட்டுமல்ல, சந்திரனும் நட்சத்திரங்களும் கூட பாதிக்கப்பட்டன. இதற்குள் பக்திமார்க்கமும் கெட்டுப்போய், கர்த்தரின் நியாயத்தீர்ப்பின் கீழ் ரோமப் படைகள் தேவாலயத்தை அழித்துப் போட்டன. "ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும்." (மத் 24:2). இந்தச் சமயத்தில் யூத அரசியல் "வானங்கள் மடமட என்று அகன்றுபோம்; பூதங்கள் வெந்து உருகிப்போம்" (2 பேதுரு 3:10). மோசேயின் ஆராதனை முறைமை முடிந்து போயிற்று. எதற்கு அடையாளமாயிருந்ததோ அந்த இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டான புதிய உடன்படிகன அதன் இடத்தை அடைந்தது.

இஸ்ரவேலின் வானங்களில் மட்டுமே சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் இருந்தன என்பதில்லை. இஸ்ரவேலின் மீது ஆளுகை செய்த சாம்ராஜ்யங்களும் கூட அவைகளைப் பெற்றிருந்தன. பாபிலோனைக் கர்த்தர் வீழ்த்தியது குறித்து ஏசாயா எழுதியதாவது, "வானத்தின் நட்சத்திரங்களும் ராசிகளும் ஒளி கொடாதிருக்கும்; சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளி கொடாதிருக்கும்." (ஏசாயா 13:10) ஆகவே பாபிலோனிய அரசியல்

இஸ்ரவேல் தேசம் கர்த்தரின் (யாஹ்வே) நியாயத்தீர்ப்பினால் துன்பத்திற்குள்ளாக வேண்டுமென்றிருந்தது. பாபிலோன் இஸ்ரவேல் தேசத்தை ஆண்டுகொண்டிருந்தது. யூதர்கள் விக்கிரகங்களை வணங்கக்கட்டாயப்படுத்தியது (தானி 3:6). இப்படி தன்னை தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாய் உயர்த்தியது.

ரோம வானங்களிலும் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. ''அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள்; அவள் பாதங்களின் கீழே சந்திரனும் அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன." (வெளி 12:1). இந்த சக்தி "வானத்தின் (இஸ்ரவேல்) சேனை பரியந்தம் வளர்ந்து அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றைப் பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது. அது சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று; அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது." (தானி 8:10,11) இப்படி மோசேயின் முறைமையின்படியான ஆராதனை நீக்கப்பட்டது. இஸ்ரேலிய வானங்கள் நீங்கி, அதனிடத்தில் ரோம வானங்கள் வந்தோடு ஆராதிப்பதில் பொய்யான முறைமை நிலையாக நிறுத்தப்பட்டது. இந்தப் பொய்யான முறைமை பழங்கால பாபிலோனிய முடநம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

யோவேல் 3:15ல் முடிவு காலத்தில் இஸ்ரவேல் தேசம் மீண்டும் துன்பத்திற்குள்ளாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. ''சூரியனும் சந்திரனும் இருண்டு போகும், நட்சத்திரங்கள் ஒளி மழுங்கும்," இப்பொழுது நாம் இஸ்ரேலில் காண்பது அரசியல் வானங்களில் எழுப்புதல், மற்றுமொரு முறையாக அவர்களுக்கு சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் ஒரு அரசாங்கம் மற்றும் மதம் உள்ளது. ஆனால் அவர்கள் இன்னும் கர்த்தருக்குக் (யாஹ்வே) கீழ்ப்படியாமல்தான் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மேசியாவாக ஒப்புக்கொள்கிறதில்லை. தேவனுடைய வல்லமையைக் காட்டிலும் தங்கள் ராணுவ பலத்தையே நம்புகிறார்கள். ஆகவே அவர்களுக்கு விரோதமாகக் கோகின் சேனையைக் கொண்டு வருவதன் மூலம் கர்த்தர் (யாஹ்வே) இன்னும் ஒருமுறை இஸ்ரவேலை தண்டிப்பார். பாதிநகரம் சிறைப்பட்டுப் போகும். (சகரியா 14:2)

ஆனாலும் ''கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்" என யோவேல் கூறுகிறார். இஸ்ரவேல் எலியாவின் (மல்கியா 4:5) ஊழியத்தினிமித்தம் மனந்திரும்பி, தாங்கள் குத்தின ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பார்த்துப் புலம்புவார்கள். (சகரியா 12:10). அவர்கள் இயேசுவை மேசியாவாக அறிந்து கொண்டு கர்த்தரிடம்



திரும்புவார்கள். ''அவர் வந்து யுத்தநாளில் போரிடுவது போல, அந்த தேசங்களுக்கு விரோதமாக யுத்தம் செய்து இஸ்ரவேல் ராஜ்யத்தை மீண்டும் நிலைநிறுத்துவார். "உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை; உன் சந்திரன் மறைவதுமில்லை; கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; உன் துக்க நாட்கள் முடிந்துபோம்." (ஏசாயா 60:20) அப்பொழுது முழு இஸ்ரவேலின் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களும் ஆதியாகமம் 37ல் உள்ள குடும்பவட்டமும் பெரிய யோசேப்பை வணங்கி ஆராதிப்பார்கள். ஏனெனில் உலகம் அவரின் பாதங்களுக்கடியில் கொண்டுவரப்படும்."

**- கிரிஸ் மடக்ஸ்.**

# வினாவிடை

1. ''சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்குவதாக சொப்பனம் கண்டவர் யார்?
2. லூக்காவின் தொழில் யாது?
3. "ஈசாயின் அடிமரத்திலிருந்து தோன்றிய துளிர்" எனப்படுபவர் யார்?
4. இயேசு தம் ஊழியத்தின் ஆரம்பத்தில் நாசரேத்திலுள்ள ஜெப ஆலயத்திற்குச் சென்ற நாளில் எந்த தீர்க்கதரிசியின் புத்தகத்திலிருந்து வாசித்தார்?
5. சோதோம், கொமோராவில் நீதிமான்கள் இருந்தால் அந்நகரங்களை அழிக்க வேண்டாம் என தேவனைக் கேட்டுக் கொண்டது யார்?
6. யாரைக் குறித்து, ''இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாயிருக்குமோ? கர்த்தருடைய கரம் அந்த பிள்ளையோடே இருந்தது" என சொல்லப்பட்டது?
7. "என்காலங்கள் உம்முடைய கரத்தில் இருக்கிறது" என்று தேவனிடம் சொன்னது யார்?
8. யோப்பாவில் பேதுரு ஜெபித்ததன் பலனாய் அநேகர் விசுவாசிக்கத் தக்கதாக என்ன நடந்தது?
9. அன்னாள் சாமுவேலை ஆலயத்திற்கு கொண்டு வந்தபோது அங்கு பணி செய்த ஆசாரியன் பெயர் என்ன?
10. பார்வோனின் பானபாத்திரக்காரன் கனவில் கண்ட மூன்று கொடியுடன் எதைக்குறிப்பதாக யோசேப்பு அர்த்தம் சொன்னான்?

**விடைகள்:** யோசேப்பு, வைத்தியன் (கொலோ 4:14) இயேசு கிறிஸ்து (ஏசாயா 11:1-5), ஏசாயா (லூக் 4:17-19) ஆபிரகாம் (ஆதி 18:20-24), யோவான் ஸ்நானகன் (லூக்கா. 1:57-66) தாவீது (சங் 31:15) மரித்த பெண் உயிரோடு எழுப்பப்பட்டாள். (அப். 9:39-42), ஏலி (1சாமு 1:25-28) நாட்கள் (ஆதியாகமம் 40:12)

# வாசித்துப் புரிந்துகொள்ளுதல்

**(பத்திரிக்கை 43ன் தொடர்ச்சி)**

## மேற்கோள் 13 & 14 : முழு உலகிற்கும் எருசலேம் எதிர்காலத் தலைநகரமாயிருக்கும்

எரேமியா 3:17

எரே 3:17 அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்; சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள்; அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்.

மீகா 4:1-4

**எருசலேமின் எதிர்கால மகிமை**

மீகா 4:1 ஆனாலும், கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதினிடத்திற்கு ஓடிவருவார்கள். Mic 4:2 திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். Mic 4:3 அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. Mic 4:4 அவனவன் தன் தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன் தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்; சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று.

சகரியா 8:22-23

சக 8:22 அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள். Zec 8:23 அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

**கேள்வி 5.9** ஆபிரகாம் மற்றும் அவன் வித்தினால் எல்லா மக்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என ஆபிரகாமுக்கு வாக்கு அருளப்பட்டது. புதிய உலக அமைப்பில் எவ்விதமான ஆசீர்வாதங்களை மக்கள் அனுபவிப்பார்கள். (மேற்கோள் 10, 12,13 காண்க)



சமாதானம், செழிப்பு, ஒற்றுமை, போர், குற்றம், வியாதி, பேரழிவு நீக்கப்படும்).

## மேற்கோள் 15, 16 & 17 : முழு உலகின் இராஜாவாக இயேசு இருப்பார்

சங்கீதம் 89:35-37

சங் 89:35 ஒருவிசை என் பரிசுத்தத்தின்பேரில் ஆணையிட்டேன், தாவீதுக்கு நான் பொய்சொல்லேன். Psa 89:36 அவன் சந்ததி என்றென்றைக்கும் இருக்கும்; அவன் சிங்காசனம் சூரியனைப்போல எனக்கு முன்பாக நிலைநிற்கும்.

சங்கீதம் 132:11

சங் 132:11 உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும்,

அப் 2:29-32

அப் 2:29 சகோதரரே, கோத்திரத்தலைவனாகிய தாவீதைக்குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது. Act 2:30 அவன் தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம் பண்ணினதை அறிந்தபடியால், Act 2:31 அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான். Act 2:32 இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.

**மத்தேயு புத்தகத்திலுள்ளபடி கிறிஸ்துவின் வம்ச அட்டவணை**

மத்தேயு 1:1

மத் 1:1 ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு: ஸ

**கேள்வி 5.10** மேலையுள்ள மேற்கோள்களில் தாவீதுக்கு வாக்கு அருளப்பட்ட சந்ததி அல்லது ‘வித்து’ யார் ? தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நம் உலகின் எதிர்காலத்தோடு எப்படி தொடர்புள்ளதாயுள்ளது ?

மரியாளிடம் பிறந்த இயேசு தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ராஜா. அவர் ராஜ்யத்தை ஆள்வதால் தாவீதுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேறும். அவருடைய ராஜ்யம் எருசலேமில் ஸ்தாபிக்கப்படும். ஆனால் முழு உலகிலும் அதிகாரம் செலுத்துவார்.